# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 17.12.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: நம்பிக்கையாளர்கள் எல்லாரையும் விட அதிகமாக அல்லாஹ்விடமே நேசம் கொள்கின்றனர். அல்லாஹ்வின் மீதான இந்த நேசம் தான் படிப்படியாக அல்லாஹ்வின் அன்பர்கள் மீது அன்பு மற்றும் நேசம் கொள்ளத் தூண்டுகிறது. மேலும் இதுபோன்றவர்கள் அல்லாஹ்வின் அன்பைப் பெற முயற்சி செய்கின்றனர். எவ்வாறு அந்த நேசனின் திருப்தியைப் பெறலாம் என்ற முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருவார்கள்.

ஹதீஸிலும் வருகின்றது. எந்த நாளில் அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலுமிருக்காதோ அன்று அல்லாஹ்வுக்காக ஒருவர் மற்றவரை நேசித்தவர்கள் அல்லாஹ்வின் நிழலின் கீழ் வரக்கூடிய மக்களைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். அல்லாஹ்வுடனான அதிகமான அன்பின் வெளிப்பாடாகத்தான் இந்த அன்பு கொள்ளப்படுகின்றது. ஆக, ஒரு சாதாரண நம்பிக்கையாளர் ஒருவர் மற்றவர் மீது அல்லாஹ்வுக்காக நேசம் கொள்ளும் போது அல்லாஹ் அவருக்கு இந்த அளவுக்கு அருள் செய்கின்றான் என்றால் நபிமார்கள் மீது நேசம் கொள்ளும் போது அவருக்கு எந்த அளவுக்கு அருள் செய்வான்? அதனை கணக்கிடவே முடியாது. இந்த அன்பு மற்றும் நேசத்தின் காட்சிகளின் இறுதி எல்லை அல்லாஹ்வின் இருப்பாகவே உள்ளது. நபிமார்களின் காலத்தை அடைந்து தமது அன்பு மற்றும் விசுவாசத்தின் முன்மாதிரிகளை வெளிப்படுத்திய அந்த மக்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்?

இந்த முன்மாதிரிகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு நம்மில் பலருடைய தந்தை மற்றும் பாட்டான்மார்களுக்கும் கிடைத்துள்ளது. மூதாதையர்களுக்கும் கிடைத்தது. அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்தார்கள். மேலும் தனது அன்பு, நேசம் மற்றும் கண்ணியத்தை நேரடியாக அன்னாரிடம் வெளிப்படுத்தினார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்பு மற்றும் பரிவிலிருந்து பங்குபெறக் கூடியவர்களாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். இப்போது நான் இதுபோன்ற சில நல்லடியார்களின் அறிவிப்புகளையும், சம்பவங்கயையும் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய கைகளைத் தொட்டு நேரடியாக பயனடைந்த அந்த மக்கள் எத்துனை நற்பேறு பெற்ற மக்கள் ஆவர்!

நான் சில அறிவிப்புகளை தேர்ந்தெடுத்துள்ளேன். அதில் முதலாவது அறிவிப்பு **ஹஸ்ரத் வலிதாத் கான் (ரலி)** அவர்களுடையதாகும். அன்னார் ராஜ்புத் சமுதாயத்தைச் சார்ந்தவராவார். அன்னார் மல்கான் சாஹிப் அவர்களின் மகன் மற்றும் நாரேவால் தஹ்ஸீனில் மரோலை என்னும் ஊரைச் சார்ந்தவராவார்கள்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

நான் 1907 ஆம் ஆண்டு மாநாட்டின் போது (காதியானில்) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்தேன். ஜல்ஸாவிற்கு ஒருநாள் முன்பு இரவில் நான் காதியான் சென்றடைந்தேன். காலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வீட்டை விட்டு வெளியேற இருந்த போது ஒரு பெரிய கூட்டத்தை நான் கண்டேன். ஒருவர் மற்றவரை முந்திக் கொண்டிருந்தனர். நானோ (ஊருக்கு) புதியவனாக இருந்தேன். என்னுடைய கண்ணியத்திற்குரிய எஜமானனே! ஹுஸூர் இந்த தெருவின் வழியாக வந்தால் நான் முதலாவதாக அன்னாருக்கு கை குலுக்க வேண்டும் என்று அடுத்த தெருவில் நின்று கொண்டு நான் துஆ செய்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் மீர் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களுடன் அதே வழியில் வருவதை நான் கண்டேன்.

மேகத்திலிருந்து சூரியன் வெளியாகி திடீரென வெளிச்சம் வருவதைப் போன்று நான் அக்காட்சியை கண்டேன். நான் ஓடிச் சென்று ஹுஸுர் அவர்களை சந்தித்தேன். ஹுஸுர் ஆரிய கடைவீதி வழியாக வெளியே சென்றார்கள். நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் தோட்டத்தின் வடக்குப் பகுதி வழியாக ஹுஸுர் திரும்பி வந்தார்கள் என நான் நினைக்கின்றேன். ஏறக்குறைய நூர் பள்ளிவாசல் அல்லது அஹ்மதிய்யா மத்ரஸாவின் மேற்குப் பகுதியில் அமர்ந்திருந்தார்கள். சஹாபாக்கள் சுற்றி அமர்ந்திருந்தார்கள். மீர் ஹாமித் ஷாஹ் சாஹிப் மர்ஹும் சியால்கோட்டி அவர்கள், தான் எழுதிய சில கவிதைகளைக் கூறினார்கள்.

அடுத்து ராஜா ஃபத்ஹே முஹம்மத் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் மதத் கான் சாஹிப் (ரலி) அவர்கள் ஆவார்கள். காஷ்மீர் மாநிலம் யாரிபூரா ஊரைச் சார்ந்தவராவார். 1896 -ல் பைஅத் செய்தார்கள். அவர்கள் 1904 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்தார்கள்.

ஒருமுறை எனக்கு ரமலான் மாதத்தில் என்னுடைய ஊரில் இந்த முறை காதியான் சென்று நோன்பு வைத்து, அங்கு பெருநாள் தொழுகை முடித்து விட்டு வேலைக்கு செல்ல வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அந்த நாட்களில் அப்போதுதான் நான் இராணுவத்தில் சேர்ந்திருந்தேன். ஹுஸுர் அவர்களின் அருளுக்குரிய முகத்தை தரிசிக்கும் பாக்கியத்தை பெறுவதற்கும், அன்னாரின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்யும் விதமாக வேலைக்கு செல்வதற்கு முன் காதியான் செல்ல வேண்டும் என்ற ஆசை தான் எனக்கு எப்போதும் இருந்து வந்தது. ஏனென்றால் நான் தபால் மூலமாகத்தான் 1895 அல்லது 1896 -ல் பைஅத் செய்திருந்தேன்.

இது காதியான் வருவதற்கு என்னுடைய முதல் சந்தர்ப்பமாகும். எனவே என்ன ஆனாலும் ஹுஸுரை எப்படியாவது கண்டுவிட்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் என்னிடத்தில் மேலோங்கி விட்டது. ஏனென்றால் வேலைக்கு சென்ற பிறகு ஹுஸுரை காண்பதற்கு வாய்ப்பு கிடைக்குமா? கிடைக்காதா? என்பதை இறைவனே நன்கறிவான். எனவே முதலில் காதியான் சென்று ஹுஸுரைப் பார்த்து விட்டு பின்னர் திரும்பி வந்து வேலைக்குச் செல்வோம் என்று நான் தீர்மானித்தேன். ஆக நான் இந்த எண்ணத்துடன்தான் காதியான் வந்தேன். காதியான் சென்று ஹுஸுரை சந்தித்தேன். எனக்கு முழு காஷ்மீர் கிடைத்தாலும் கூட அன்னாரை விட்டு விட்டு; காதியானை விட்டு விட்டு வெளியே ஒருபோதும் செல்ல முடியாது என்ற எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றியது. அன்னாருடைய ஈர்ப்பு சக்தி என்னை திரும்பிச் சென்று விடாமல் இருக்கும்படி என்னை நிர்பந்தித்தது. அன்னாருடைய அருளுக்குரிய முகத்தைக் கண்ட பிறகு காதியானை விட்டு வெளியே செல்வது மிகவும் கஷ்டமாகிப் போனது. எந்த அளவுக்கு என்றால், நான் அன்னாரைப் பார்த்த போதே அனைத்தையும் மறந்து விட்டேன். வெளியில் உனக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைத்தாலும் என்ன பயன்? அதன் பின்னர் இந்த ஒளிமயமான அருளுக்குரிய முகம் உனக்கு தென்படாது என்ற எண்ணம்தான் எனது உள்ளத்தில் இருந்து வந்தது. எனவே இதன் காரணமாக நான் எனது ஊருக்கு திரும்பும் எண்ணத்தை கைவிட்டு விட்டேன். மேலும் இன்று அல்லது நாளை நான் மரணித்து விட்டால் ஹுஸுர் அவர்கள் ஜனாஸா தொழ வைப்பார்கள். அதன் மூலமாக சுமையும் எளிதாகி விடும். அல்லாஹ்வும் திருப்தி அடைந்து விடுவான் என்ற எண்ணம் தான் என் உள்ளத்தில் இருந்து வந்தது. எனவே காதியானிலேயே தங்குவது என தீர்மானித்தேன்.

தினமும் துஆவுக்காக ஹுஸுர் அவர்களின் வீட்டிற்கு சென்று யாராவது ஒருவரிடம் கடிதம் கொடுத்து வந்தேன். ஆனால் என்னுடைய இந்த செயலினால் ஹுஸுர் கோபப்பட்டு விடக்கூடாது என உள்ளத்தால் அஞ்சிக் கொண்டிருந்தேன். நான் எப்போதும் அவர்களை தொந்தரவு செய்து வருவதாக அவர்கள் எண்ணி விடுவார்களே என்ற எண்ணமும் மேலோங்கி இருந்தது. ஆனால் எனது இந்த எண்ணம் தவறாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு எழுதிய பதில் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்கள்:

"நீங்கள் என்னை அடிக்கடி நினைவில் கொண்டு வருகின்றீர்கள். நானும் அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டு வருகிறேன். இனியும் துஆ செய்தும் வருவேன். (இன்ஷா அல்லாஹ்) இறைவன் தானாகவே உங்களுக்கு இம்மை மற்றும் மறுமையில் வெற்றியை வழங்குவான். இறைவன் உங்கள் மீது திருப்தி

கொள்வான். அல்லாஹ் உங்களுடைய திருமணத்தையும் நிச்சயமாக நடத்தி தருவான். இனி எனக்கு நீங்கள் நினைவூட்டி வாருங்கள். நான் உங்கள் மீது மிகவும் மகிழ்ச்சி கொண்டுள்ளேன்''.

ஹுஸூர் அவர்களின் அந்த கடிதத்தை நான் ஷேக் குலாம் அஹ்மத் சாஹிப் அவர்களிடம் காண்பித்து, ஹுஸூர் எனக்கு இவ்வாறு பதில் எழுதியுள்ளார்கள் என்று நான் கூறினேன். ஹுஸூர் அவர்களிடம் எனது திருமணம் தொடர்பாக சைகையாக கூட நான் எதுவும் கூறவில்லை. அவ்வாறிருக்க இது என்ன விஷயம் எனக் கேட்டேன். அதற்கு ஷேக் சாஹிப் அவர்கள் இனி உங்களது திருமணம் விரைவில் நடைபெற்று விடும் என சிரித்தபடி கூறினார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் கூறியது வீண்போகி விடாது. நீங்கள் (திருமணத்திற்கு) தயாராகிக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறியதிலிருந்து இரண்டு மாதத்திற்குள் எனக்கு திருமணம் நடந்தது. இதற்கு இறைவன் சாட்சியாவான். எனக்கு இதற்கு முன் எங்கும் திருமணம் நடைபெறவில்லை. எனக்கு ஹுஸூர் அவர்கள்தான் திருமணம் செய்து வைத்தார்கள். இல்லையென்றால் என்னைப் போன்ற வெளியூர் ஆட்களை யார்தான் கண்டு கொள்வார்கள்? அன்னாரின் சிறப்பான கருணை மற்றும் பரிவின் காரணமாகவே எனக்கு திருமணம் நடந்தது.

கமால்டேரா சிந்து பகுதியைச் சார்ந்த ஹஸ்ரத் மாஸ்டர் முஹம்மது சுஹைல் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு அம்மாபஃத். அல்லாஹ்வின் அருளினாலும் கருணையினாலும் 1905 ஆம் ஆண்டு ஜுலை மாதம் அல்லாஹ்வின் பயில்வான் அவர்களின் கையில் இந்த எளியவன் பைஅத் செய்தேன். அந்தக் காலத்தில் முபாரக் பள்ளிவாசல் மிகவும் சிறியதாக இருந்தது. 5, 6 பேர் ஸஃப்பில் அமர்ந்தவுடன் இடம் நிரம்பி விடும். ஜுலை மாதத்தில் அதிக வெப்பம் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளியில் அமரும் போது நான் கை விசிறியைக் கொண்டு வீசி வந்தேன். மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்களின் அலுவலகம் பள்ளிவாயிலின் மேல் தளத்திலேயே இருந்தது. மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் ஹுஸூரிடத்தில் ஏதோ கேட்க இருந்தார்கள். ஆனால் இடமில்லாததால் அவர்களுக்கு நிற்க வேண்டியதாயிற்று. நானே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன்பு அன்னாரின் அருளுக்குரிய மூட்டோடு என்னுடைய தொடையை உரசும் வகையில் அமர்ந்து கொண்டு கை விசிறியை வீசிக் கொண்டிருந்தேன். மவ்லவி முஹம்மது அலி சாஹிப் ஒரு நபர் மூலமாக விலகி அமரும்படி எனக்கு சைகை காட்டினார்கள். அந்த சைகையின்படி நான் பின்னால் விலக முயன்றபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது தொடையில் கை வைத்துக் கூறினார்கள். விலகத் தேவையில்லை. அவ்வாறே அமர்ந்திருங்கள் எனக் கூறினார்கள். தொடர்ந்து நான் விசிறியை வீசிக் கொண்டிருந்தேன். மேலும் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அவர்கள் நின்றவாறே தான் கேட்க விரும்பியதை கேட்டார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதற்குரிய பதிலை வழங்கினார்கள். மவ்லவி சாஹிப் அதனை எழுதிக் கொண்டு சென்று விட்டார்கள். அக்காலத்தில் இந்த விஷயம் புரியவில்லை. ஆனால் இப்போது அதனால் எனக்கு மகிழ்ச்சியும் இன்பமும் ஏற்படுகின்றது. நான் ஒரு மிகச் சாதாரண மனிதனும், அறிவற்றவனும் ஆவேன். உருது கூட சரிவர தெரியாது. ஆனால் அவர்கள் படித்தவர் மற்றும் ஆலிம் ஆவார்கள். ஆனால் அல்லாஹ்வின் நபியின் பார்வையில் கீழானவரும் மேலானவரும் சமமானவரே! இந்த எளியவன் 15 நாட்கள் அன்னாருடன் இருந்தேன். ஒவ்வொரு நாளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முகம் ஒளிமயமாகவே இருந்தது. ஹுஸூர் அவர்கள் குளியலறையிலிருந்து குளித்து விட்டு இப்போதுதான் வெளியேறினார்கள் என்பது போலவும், அன்னாரின் அருளுக்குரிய தலைமுடி தோள்களின் வரை படர்ந்திருந்தது. அதிலிருந்து முத்து துளிகள் வீழ்வதைப் போலவும் நான் கண்டேன். நான் அன்னாருடன் தங்கியிருந்த 15 நாட்களில் அன்னாரின் முகத்தில் துக்கத்தைக் காணவில்லை. சபைகளில் வரும்போதெல்லாம் மகிழ்ச்சியாகவும், புன்னகைத்தவராகவுமே அன்னார் காணப்படுவார்கள்.

அடுத்து –ர்ஃபுத்தீன் சாஹிப் அவர்களின் மகன் சவுத்ரி அப்துல் ஹக்கீம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

1902 –ல் கோடை காலமாக இருந்தது. நான் அந்த நேரத்தில் முல்தான் ஷாவ்னி இரயில் நிலையத்தில் சிக்னல் ஊழியராக பணியாற்றினேன். நான் அஹ்லே ஹதீஸ் சிந்தனைகளை கொண்டவனாகயிருந்தேன். மேலும் மவ்லவி அப்துல் ஜப்பார் சாஹிப் மற்றும் அப்துல் ஹஃப்பார் என்ற இரண்டு அஹ்லே ஹதீஸ் மவ்லவிகள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் சகோதரர்கள் ஆவர். முல்தான் நகரத்து கோட்டையின் பக்கம் அவர்களின் புத்தகக்கடை இருந்தது. நான் அவர்களிடமிருந்துதான் திருக்குர்ஆன் மொழியாக்கம் கற்று வந்தேன். தற்செயலாக அஹ்மதி மவ்லவி பத்ருத்தீன் சாஹிப் அவர்களை நான் சந்தித்தேன். அன்னார் நகரத்தின் ஒரு தனியார் பள்ளிக்கூடத்தில் தலைமையாசிரியராக இருந்தார்கள். அல்ஹகம் பத்திரிகை படிப்பதற்காக முதல் பக்கத்தில் இறைவனின் புதிய வஹீ மற்றும் காலத்தின் இமாமின் தூய வார்த்தைகள் என்று எழுதப்பட்டிருந்தது. அதனை படித்து உடனடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் விரைவாக செல்ல வேண்டுமென்ற ஈர்ப்பு சக்தி எனது உள்ளத்தில் எழுந்தது.

அல்லாஹ் அருள் செய்தான். அஹ்லே ஹதீஸாக இருந்தபோதிலும் மவ்லவிமார்கள் தடுத்தபோதிலும் நான் குறுகிய காலத்திலேயே அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டேன். மவ்லவி பத்ருத்தீன் சாஹிப் அவர்கள் உடனடியாக காதியான் செல்லும்படி எனக்கு ஆலோசனை வழங்கினார்கள். என்னுடன் வேறொரு மவ்லவி சாஹிபும் காதியான் செல்லத் தயாரானார்கள். அவர் அஹ்லே ஹதீஸ் மவ்லவி சுல்தான் முஹம்மத் அவர்களின் சிறப்பான சீடராவார்.

அது ஏழ்மையான காலகட்டம். என்னுடைய சம்பளம் 15 ரூபாய் தான். நான் விடுமுறை எடுத்தேன். ரயில்வே பாஸ் பயன்படுத்த அனுமதியில்லை. நான் அமிர்தசரஸ் வரை செல்ல டிக்கெட் எடுத்தேன். காதியான் வரை சென்றடைய பணம் இல்லை. அமிர்தசரஸோடு டிக்கெட் முடிவடைந்தது. நாங்கள் பட்டாலா வண்டியில் ஏற வேண்டும். ஆனால் எங்களிடம் வெறும் 8 அனாதான் இருந்தது. எனவே இரண்டு அனாவிற்கு இரண்டு டிக்கெட் எடுத்து வண்டியில் அமர்ந்து விட்டோம்.

வண்டியில் ஏறிய பிறகு நாம் பட்டாலா செல்ல வேண்டும்; ஆனால் அதற்குரிய டிக்கெட் எடுக்கவில்லை என்ற நினைவு வந்தது. ஆனாலும் வண்டியில் அமர்ந்திருந்தோம். இதற்கிடையில் டிக்கெட் ஆய்வாளர் வந்து விட்டார். எங்களுடைய டிக்கெட்டை பரிசோதித்தார். எங்களுடைய டிக்கெட்டை நன்றாக பரிசோதித்த பின்னரும் சரியாகவுள்ளது எனக்கூறி கொடுத்து விட்டார். இதே போன்று Station –ஐ விட்டு வெளியேறும் போதும் டிக்கெட் செக்கிங் செய்யக்கூடியவர் செக்கிங் செய்தார். ஆனால் ஒன்றும் கூறவில்லை. அல்லாஹ்வே! நாங்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக செல்கிறோம். எங்களை எல்லா வகையான இழிவிலிருந்தும் பாதுகாப்பாயாக! என்று நாங்கள் துஆ செய்தோம். ஆக, இவ்வாறு அந்த டிக்கெட் எங்களை கடைசி வரை கொண்டு சேர்த்து விட்டது. முதன் முதலில் நாங்கள் கண்ட அற்புதம் இதுவாக இருந்தது.

எப்படியிருப்பினும், அவர்களின் நிய்யத் நல்லதாக இருந்தது. நிர்பந்தத்தின் காரணமாக அவர்கள் டிக்கெட் எடுக்கவில்லையே ஒழிய வேண்டுமென்றோ அல்லது ஏமாற்றும் விதமாகவோ டிக்கெட் எடுக்கவில்லை.

தொடர்ந்து அன்னார் எழுதுகின்றார்கள்: எவ்வாறிருப்பினும் நாங்கள் காதியான் சென்றடைந்தோம். பட்டாலாவிலிருந்து காதியான் நடந்தே சென்றோம். நாங்கள் காதியான் சென்றடைந்து முபாரக் பள்ளிவாசலுக்கு நுழைந்த மாத்திரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் வருகை தந்தார்கள். என்னுடன் இருந்த நண்பர் அஹ்லே ஹதீஸின் ஆலிமாக இருந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்த உடனேயே ஒரு கேள்வி கேட்டேன். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் வழிகாட்ட நம்மிடம் இருக்கும்போது உங்களிடம் பைஅத் செய்வதற்கு என்ன தேவை உள்ளது? எனக் கேட்டார். ஹுஸூர் அதே தருணத்தில் எழுந்து நின்றார்கள். சொற்பொழிவு நிகழ்த்த தொடங்கினார்கள். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு நிறைவு

பெறுவதற்கு முன்னரே ஹுஸூர் எனக்கு மனநிறைவு ஏற்பட்டு விட்து. நான் பைஅத் செய்கிறேன் என என்னுடன் வந்திருந்த கேள்வி கேட்ட நண்பர் கூறினார். இப்போது காத்திருங்கள். முழுமையாக திருப்தி கொள்ளுங்கள். உங்களுக்கு தவறு ஏற்பட்டு விடக்கூடாது என ஹுஸூர் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள லுஹர் தொழுது விட்டு வீட்டிற்கு சென்று விட்டார்கள். ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிறைவுபெற்றவுடன் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் பத்திரிகைகளில் எல்லாம் எழுதப்பட்டுள்ளது. எல்லா கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரும் வெளியிலிருந்து வரக்கூடியவர்கள் கேள்வி கேட்டு துன்பம் தருகின்றனர். பத்திரிகை படிப்பதில்லை எனக் கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் கூறினார்கள்: சொற்பொழிவோ நான் நிகழ்த்துகின்றேன். அதனால் துன்பம் உங்களுக்கு எப்படி ஏற்படுகின்றது? கேள்வி கேட்கக்கூடிய ஒவ்வொரு நபருக்கும் சிரித்த முகத்துடன் ஹுஸூர் பதிலளித்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ஷர்ஃபுத்தீன் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் சவுத்ரி அப்துல் ஹக்கீம் சாஹிப் எழுதுகின்றார்கள்:

நான் எந்த மாலைப் பொழுதில் பைஅத் செய்தேனோ அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சென்ற பிறகு முபாரக் பள்ளிவாசலின் மேல் தளத்தில் உள்ள அறையில் வசித்து வந்த ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் சென்றேன்.

அன்னார் ஒரு சிறிய கட்டிலை மேல் தளத்தில் போட்டிருந்தார்கள். நான் அவர்களிடத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருந்து பல விஷயங்களைப் பற்றி கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் ஒரேயொரு விஷயத்தை தவிர எனக்கு வேறொன்றும் நினைவில் இல்லை. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். நூருத்தீன் உலகினை சம்பாதிக்க காதியான் வந்துள்ளான் என எதிரிகள் கூறுகின்றனர். எனக்கோ பாதி உடம்பு வெளியில் இருக்கும் அளவில் ஒரு கட்டில்தான் கிடைத்துள்ளது. ஆனால் நானோ இறைவனுக்காகத் தான் இங்கு வந்துள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து அதன் மூலமாக அந்த இறைவனை நான் பெற்றுக் கொண்டேன். ஆக இந்த உயர் தகுதியின் காரணமாகத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு புகழ்கின்றார்கள்.

ஒவ்வொரு உள்ளத்திலும் நூருத்தீனை போன்று உணர்விருந்தால் அது மகிழ்ச்சியான விஷயமாகும். மேலும் எல்லா உள்ளத்திலும் நம்பிக்கை நிறைந்திருக்கும் போது தான் அது சாத்தியமாகும்.

அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம் தொடர்பாக ஹக்குல் யகீனி (உண்மையான ஞானத்தில்) நிலைபெறும் போதுதான் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபிற்கு கிடைத்த அந்த உயர் அந்தஸ்து எல்லாருக்கும் கிடைக்கும்.

முஹம்மத் ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் முராதாபாத்தைச் சார்ந்த ஹஸ்ரத் ஹாமித் ஹுஸைன் கான் சாஹிப் (ரலி) கூறுகின்றார்கள்:

நான் 1902 -ல் அலிகடிலிருந்து மீரட் வந்து பணியாற்றிக் கொண்டிருந்தேன். என்னுடைய பணி மாற்றத்திற்கு சில காலம் கழித்து மதிப்பிற்குரிய ஸூல்பிகார்கான் அலி சாஹிப் அவர்களும் பணிமாற்றம் பெற்று மீரட் வந்தடைந்தார்கள். அன்னார் அஹ்மதி ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் பைஅத் செய்திருந்தார்கள். எனவே அன்னாரின் வீட்டில் மார்க்க விஷயங்கள் பேசப்பட்டு வந்தன. ஷேக் அப்துர் ரஷீத் சாஹிப் கேட்டு கொண்டதற்கேற்ப மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் போன்றவர்கள் கான் சாஹிப் வீட்டிற்கு வந்து சென்றார்கள். கான் சாஹிப் அவர்களுடன் அலிகட் கல்லூரியில் படித்ததன் காரணமாக அன்னார் மீது எனக்கு அன்பிருந்தது. எனவே அன்னாரின் வீட்டில் நடைபெற்ற மார்க்க விஷயங்களில் பங்கு பெற்றேன். நான் புத்தகம் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை வெளிப்படுத்தினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சிறு சிறு புத்தகங்களை எனக்கு கான் சாஹிப் கொடுத்தார்கள். முதலில் பரகாத்துத் துஆ படித்தேன். இதேபோன்று வேறு சில புத்தகங்களும் இருந்தன. அதனை நான் படிக்க துவங்கினேன்.

மவ்லவி முஹம்மத் ஆஸிம் சாஹிப் அம்ரூகி கான் சாஹிபிடத்தில் வந்தார்கள். அப்போது மீரட்டில் முனாசிரா நடைபெற்றது. மஸீஹின் மரணம் பற்றி மட்டும் விவாதிக்கப்பட்டது. முனாசிரா மீரட்டைச் சார்ந்த தீய மக்களுக்கு பயனளிக்கவில்லை. ஆனால் மவ்லவி முஹம்மத் ஆஸிம் சாஹிப் அவர்களின் மஸீஹின் மரணம் தொடர்பான சொற்பொழிவை நான் கேட்டேன். மீரட் மக்களுடன் முனாசிரா தொடர்பாக சச்சரவு ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் அதன் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்கும் ஆர்வம் ஏற்பட்டது. நான் கான் சாஹிப் மர்ஹூமிடம் கூறினேன். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் மீரட் பக்கம் வருகை தந்தால் எனக்கு கண்டிப்பாக தகவல் தாருங்கள். நான் அந்த மகத்துவமிக்க மனிதரைப் பார்க்க விரும்புகிறேன். அவரை பார்க்கவில்லையென்றால் அது எனது துரதிஷ்டமாக இருக்கும்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

அப்போது எனக்கு பைஅத் செய்யும் எண்ணம் இல்லை. அதன் பிறகு 1904 –ல் ஒரு மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்பிக்கேற்ப இது நிகழ்ந்துள்ளது என அது தொடர்பாக கூறப்பட்டது. அதன் பிறகு கான் சாஹிப் மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் டில்லிக்கு வருகை தருகின்றார்கள். நீங்கள் சந்திப்பதற்கு செல்லுங்கள் எனக் கூறினார்கள். அதன்படி நாங்கள் டில்லி சென்றோம். டில்லியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முஹல்லா சந்திரிங்கில் உள்ள அலஃ கான் கோட்டையில் தங்கியிருந்தார்கள். நானும், மவ்லவி சாஹிப் மர்ஹூம் அவர்களும் இரயில் மூலமாக டெல்லி சென்றடைந்தோம். சுமார் 12, 1 மணி இருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த வீட்டின் ஒரு பகுதியில் அமர்ந்திருந்தார்கள். அந்த வீட்டின் கீழ்பகுதியில் மற்றொரு நண்பர் தங்கியிருந்தார்கள். வீட்டினுள் நுழைந்ததும் எனது பார்வை மவ்லவி முஹம்மது ஆஸிம் அவர்கள் மேல் விழுந்தது. ஏனென்றால் எனக்கு அவரது அறிமுகம் இருந்தது. மீரட்டில் தங்கியிருந்த சமயத்திலேயே அறிமுகம் ஏற்பட்டது. நான் அவர்களோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்திலேயே கான் சாஹிப் அவர்கள் தங்கியிருந்த மேற்பகுதி வீட்டில்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்கியிருந்தார்கள். நான் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த இடத்தில் மேற்பகுதிக்கு செல்ல ஏணிப்படி இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் அமைதியாக கீழே வருகை தந்தார்கள். வருகை தந்து எனக்கு மிக அருகில் என்னுடன் அமர்ந்து கொண்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் வந்து அமர்ந்த பிறகு யாரும் என்னிடத்தில் கூறவில்லை. எனனாலும் அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. அப்போது யாரோ என்னிடம் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகை தந்துள்ளார்கள். நான் பதறிப் போய் எழ முயற்சி செய்தேன். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் அமர்ந்திருங்கள் எனக் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் எனனை கைகளால் பிடித்து அமரும்படி செய்தார்களா? அல்லது நாவினால் அமரும்படி கூறினார்களா? என்று எனக்கு நினைவில்லை. ஹஸ்ரத் சாஹிப் வருகை தந்த பிறகு, அவ்விடத்தின் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்தவர்களுக்கு தகவல் கிடைத்தது. மேலும் அவ்விடத்தில் சலசலப்பு ஏற்பட்டு ஒரு கூட்டம் கூடியது. அப்போது கான் சாஹிப் அவர்கள் இவர் மீரட்டிலிருந்து வந்துள்ளார் என ஹஸ்ரத் சாஹிபிடம் கூறினார்கள். இவ்வாறு பேசிக் கொண்டிருந்தோம். பின்னர் லுஹர், அஸர் தொழுகை நடைபெற்றது. அதன் பின்னர் எவர்கள் பைஅத் செய்ய விரும்புகிறார்களோ அவர்கள் முன்னால் வாருங்கள் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அதனை வேறொரு நண்பரும் உரத்த குரலில் அறிவிப்பு செய்தார். ஆக பல நண்பர்கள் முன்னால் சென்றார்கள். நான் பின்னால் அமர்ந்திருந்தேன். ஹுஸூர் அவர்கள் பைஅத் வாங்குவதற்கு முன் என் அருகில் வரமுடியாத நபர்கள் அவர்கள் பைஅத் செய்வதற்காக அமர்ந்துள்ள நண்பர்களின் முதுகில் கை வைத்து நான் கூறுவதை திரும்ப கூறுங்கள் என்று கூறினார்கள்.

நான் மட்டும் தனியாக பின்புறம் அமர்ந்திருந்தேன். ஏனென்றால் அப்போது பைஅத் செய்யும் எண்ணம் எனக்கு இல்லை. நான் எனது கையை பைஅத் செய்வதற்காக முன்னால் அமர்ந்திருப்பவர் மீது கை வைக்கவுமில்லை. ஆனால் ஹஸ்ரத் சாஹிப் பைஅத் வாங்க துவங்கியவுடன் என்னையும் அறியாமல் தானாக எனது கை முன்னோக்கி சென்றது. எனக்கு முன்பு அமர்ந்திருந்த நண்பரின் முதுகில் நான் எனது கையை வைத்தேன். அதோடு பைஅத் சொற்களையும் கூறிக் கொண்டிருந்தேன்.

எனக்கு நன்றாக நினைவுள்ளது. எனது கை என்னையும் அறியாமல்தான் முன்னோக்கி சென்றது. தானாகவே முன்னோக்கி சென்றது. மாறாக, ஹஸ்ரத் சாஹிப் ரப்பி ழழம்து நஃப்ஸி என்ற துஆவினை கூறினார்கள். எல்லோரும் அதனை கூறினார்கள். நானும் கூறினேன். ஆனால் ஹஸ்ரத் சாஹிப் அதன் பொருளை விளக்க துவங்கிய பிறகு பைஅத் செய்தவர்களை அந்த சொற்களை கூறும்படி கூறினார்கள். நான் அப்போது அந்த வார்த்தைகளை கூறிய போது நான் என் பாவங்களை நினைவு கூர்ந்து எனக்கு மிகவும் உருக்கம் ஏற்பட்டது. எந்த அளவுக்கு என்றால் எல்லா மக்களும் பார்த்து ஆச்சரியப்படும் அளவிற்கு கதறி அழுதேன். அழுது, அழுது நான் மயங்கி விட்டேன். என்ன நடக்கின்றது என்பதையே நான் தெரியாதவனாக இருந்தேன். நேரம் ஆன பிறகு ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் தண்ணீர் கொண்டு வரச்சொல்லி ஏதோ ஓதி அதனை என் மீது தெளித்தார்கள். எனக்கு கான் சாஹிப் மூலமாக தெரிய வந்தது. பின்னர் அன்னார் இதனை கூறினார்கள். நான் மயக்கமடைந்த நிலையில் பல நிறங்களைக் கொண்ட ஒளியின் தூண்கள் விண்ணிலிருந்து பூமி வரை இருப்பதாக கண்டது மட்டும் எனக்கு நினைவுள்ளது. அதன் பிறகு யாரோ ஒரு நண்பர் நிலத்திலிருந்த என்னை எழுப்பினார். நானும் எழுந்து விட்டேன். எந்த அளவுக்கு நிலைமை மாறியது என்றால் எழுந்து அமர்ந்த பிறகும் கூட ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு என் பெயரில் பத்ர் மற்றும் ரிவீவ் பத்திரிகைகளை அனுப்பி வைத்தார்கள். மேலும் பத்ரில் ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு இறங்கிய வஹி வெளியானது. அதன் மீது எனக்கு அதிக நேசம் ஏற்பட்டது. புதிய வஹியை நான் தான் முதலில் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஆண்டு மாநாட்டின் போது தாருல் அமான் (காதியான்) செல்லத் தொடங்கினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு துஆவுக்காக எழுதி வந்தேன். என்னுடைய ஒரு கடிதத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது அருளுக்குரிய கைகளினாலேயே பதில் எழுதி அனுப்பி வைத்தார்கள். அதனை நான் இதுவரை பாதுகாத்து வந்தேன். ஆனால் பின்னர் அது எப்படியோ தொலைந்து விட்டது.

குர்தாஸ் மாவட்டம் பாப் அனீர் ஊரைச் சேர்ந்த சதருத்தீன் சாஹிப் அவர்களின் மகன் 1894 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். அந்த ஆண்டிலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னுடைய ஆசிரியரின் பெயர் மஹருல்லாஹ் சாஹிப் ஆகும். நான் அவர்களிடம் குர்ஆன் ஓதக் கற்றுக் கொண்டேன். இமாம் மஹ்தி தோன்றவுள்ளார்கள். அவரிடம் பைஅத் செய்து கொள்ளுங்கள் எனக் கூறி வந்தார்கள்.

காதியானில் இமாம் மஹ்தி தோன்றி விட்டார் என்ற செய்தி கிடைத்தவுடன் எனது ஆசிரியர் கூறியதற்கேற்ப பைஅத் செய்து விட்டேன். நானும், எனது சகோதரர் ரஹ்மத்துல்லாஹ்வும் காதியான் சென்று (இமாம் மஹ்தி (அலை) கையில் பைஅத் செய்தோம். எப்போதும் ஜுமுஆவை காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொழுது வந்தோம். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் உங்களுடைய நண்பர்கள் உங்களிடத்தில் வருகை தரும் போது அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்து வாருங்கள் என்று கூறினார்கள். மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களும் முஃப்தி ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் அவர்களும் அவ்வப்போது எங்களிடம் வந்து சென்றார்கள்.

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை பலமுறை இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். நம்முடைய ஜமாஅத் உண்மையானதாகும். அதற்கு வீழ்ச்சி ஏற்படாது. இன்ஷா அல்லாஹ். பொய் கொஞ்ச காலத்திற்குத்தான் இருக்கும். உண்மை எப்போதும் நிலைபெற்றிருக்கும்.

கோடை காலத்தில் சில விருந்தினர்கள் காதியானிற்கு வருகை தந்தார்கள். காலை 8 மணியிருக்கும். ஹஸ்ரத் சாஹிப் சமையல்காரரிடம் விருந்தினர்களுக்கு உணவளியுங்கள் எனக் கூறினார்கள். இரவில் எஞ்சிய உலர்ந்த ரொட்டிகள்தான் உள்ளன. அதை உண்பதற்கு கொடுக்கலாமா? எனக் கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள் பரவாயில்லை அதனைக் கொண்டு வாருங்கள் எனக் கூறினார்கள். அந்த ரொட்டிகள் கொண்டு வரப்பட்டன. ஹுஸூர் அவர்களும் சாப்பிட்டார்கள். மற்ற விருந்தினர்களும் சாப்பிட்டார்கள். விருந்தினர்கள் காதியானிலிருந்து தமது சொந்த ஊருக்கு திரும்பிச் செல்ல தயாரானார்கள் என நான் நினைக்கிறேன். எனவே இரவில் எஞ்சிய ரொட்டிகளைச் சாப்பிடுங்கள். அது சுன்னத் ஆகும்.

**ஹஸ்ரத் மீரான் பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சுமார் 1897 அல்லது 1898 -ல் நான் அவர்களிடம் பைஅத் செய்தேன். இதனை கொஞ்ச காலம் வரை எனது தந்தையிடம் வெளிப்படுத்தவில்லை. எதுவரை தான் அதனை மறைக்க முடியும்? இறுதியாக, பைஅத் செய்தது தெரிய வந்தது. தெரிய வந்த உடனேயே என்னிடம் தெளிவாகப் பேசி வீட்டை விட்டு என் தந்தை என்னை வெளியேற்றி விட்டார். நான் உணவு வழங்கக்கூடியவன் அல்லாஹ் மீது தவக்குல் வைத்து ஒரு கடை ஒன்றை வடைகைக்கு எடுத்தேன். கஷ்டமான நிலைதான். ஆனால் முடிந்தவரை எப்படியாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு ஆடை எனது கைகளினால் தைத்து கொடுக்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்தில் இருந்தது. அந்த எண்ணத்துடன் நான் சல்வார் கமீஸ் தைப்பதற்காக துணியை வாங்கி வைத்தேன்.

அங்கும் இங்கும் கடன் வாங்கி காதியான் சென்றடைந்தேன். அடுத்த நாள் ஜுமுஆவாக இருந்தது. எனவே இந்த ஏழை, எளியவனின் இந்த பரிசு இன்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கிடைத்து விட்டால் ஜுமுஆவிற்கு முன்பு இந்த ஆடையை அணிந்து இந்த ஏழையின் உள்ளத்தை மகிழ்வித்து விடுவார்கள் எனக் கருதினேன். இந்த எண்ணத்துடனேயே நான் காஸி ஷியாவுத்தீன் சாஹிப் அவர்களின் கடையை சென்றடைந்தேன். அவர்களிடத்தில் எனது உள்ளத்தின் ஆசையினை வெளிப்படுத்தினேன். அவர்கள் அதனைக் கேட்டவுடன் வாருங்கள். நான் இப்பொழுதே உங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் கொண்டு செல்கிறேன் என்று கூறினார்கள். ஆக அவ்வாறு அப்போதே எழுந்து என்னை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் அழைத்துச் சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களும் அமர்ந்திருந்தார்கள். நாங்கள் இருவரும் காஜா சாஹிப் அவர்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டோம். நாங்கள் இப்போது எப்படி இங்கு வந்தீர்கள்? என காஜா சாஹிப் எங்களிடம் கேட்டார்கள். காஸி சாஹிப் எனது விருப்பத்தை அவரிடம் கூறினார்கள். கொஞ்சம் மவுனமாக இருந்த பிறகு என்னை நோக்கி நான் உங்கள் சார்பாக விஷயத்தைக் கூறி விடட்டுமா? என என்னிடம் கேட்டார்கள். இவ்வாறு செய்தால் அது உங்களின் உபகாரமாக இருக்கும். அதன் அடிப்படையில் என்னிடமிருந்து துணியை வாங்கி காஜா சாஹிப் ஹுஸூர் அவர்களிடம் கொடுத்து ஹுஸூர் இந்த ஆடையை அணிந்து ஜுமுஆ தொழ வேண்டும் என்பது இந்த பையனின் விருப்பம் என்றும் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் காஜா சாஹிப் அவர்களின் விஷயத்தைக் கேட்டு கோர்ட்டை எடுத்துப் பார்த்து அதை அணிந்தார்கள். கோர்ட் அணிந்த போது அது இறுக்கமாக இருந்தது. அப்போது ஹுஸூர் கோர்ட் இறுக்கமாக உள்ளது. அதனை நீங்கள் கழற்றித் தந்தால் நான் அதனை சரி செய்து தருகிறேன் எனக் கூறினேன். ஹுஸூர் கோர்ட்டைக் கழற்றி என்னிடம் கொடுத்தார்கள். நான் வேகமாக அதனை எடுத்துக் கொண்டு ஒரு தையல் கடைக்கு சென்றேன். அதனை சரி செய்து திரும்ப கொண்டு சென்று கொடுத்தேன். ஹுஸூர் அதனை அணிந்து கொண்டார்கள். ஆனால் பட்டன் சரிவர பொருந்தவில்லை எப்படியிருப்பினும் ஹுஸூர் கஷ்டப்பட்டு, இழுத்து பட்டன் போட்டு கொண்டார்கள். அணிவதற்கு அது ஏதுவானதா? இல்லையா? என்று ஹுஸூர் அவர்கள் சற்றும் யோசிக்கவில்லை.

மவ்லவி நேக் ஆலம் சாஹிப் அவர்களின் மகனும் ஜம்மு பகுதியைச் சார்ந்த ஹஸ்ரத் மாஸ்டர் கலீலுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

1907 -ல் ஜல்ஸாவின் போது ஹுஸூர் அக்ஸா பள்ளிவாயிலுக்கு வருகை தந்தார்கள். டாக்டர் மிர்ஸா யாகூப் சாஹிப் அவர்களுக்கு அருகில் தொழுகை விரிப்பு இருந்தது. ஹுஸூர் அவர்கள் காலணிகளை கழற்றி விட்டு தொழுகை விரிப்பை விரிக்கும்படி கட்டளையிட்டார்கள். டாக்டர் சாஹிப் அவர்கள் தொழுகை விரிப்பை விரித்தார்கள். அதன் பிறகு வட பகுதியில் டாக்டர் சாஹிபும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இடது புறம் நானும் நின்று தொழுதோம். அல்ஹம்துலில்லாஹ். அல்ஹம்துலில்லாஹ். அன்றைய தினம் அல்லாஹ்வின் பயில்வான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சொற்பொழிவு இறுதியாக இருந்தது. அதாவது 5 மணி நேரத்திற்கு பின்னர் ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். முதலில் சொற்பொழிவு நிகழ்த்தியவர்களின் எவருடைய சொற்பொழிவையும் நான் கேட்கவில்லை. மேலும் அல்லாஹ்வின் பயில்வான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பரிசுத்த அருளுக்குரிய முகத்தையே நான் பார்த்து கொண்டிருந்தேன். மேலும் ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தேன். வாழ்க்கையில் அதன் பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க முடியாது என்பதுதான் அதற்கான காரணமாகும் என நான் கருதுகிறேன். எனவே நான் ஐந்து மணி நேரம் கண் அசைக்காமல் ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய முகத்தைப் பார்த்து கொண்டிருந்தேன். இறைவன் மீது ஆணையாக! மற்றவரின் சொற்பொழிவின் எந்த பகுதியும் எனக்கு நினைவில்லை. அப்போது நான் மிகவும் மனமுறுகி உணர்வுடன் அழுது புலம்பினேன். அல்ஹம்துலிலாஹ். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேடைக்கு வந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிக அழகிய, ஆழமான தாக்கம் நிறைந்த விளக்கங்களை வழங்கினார்கள்.

இன்று நான் முன்னதாகவே கிளம்பிவிட்டேன். பனிப்பொழிவின் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இப்போது ஜும்ஆ தொடங்கிய பிறகு வெளிச்சம் வந்திருக்கின்றது. நீங்கள் பொறுமையோடு கொஞ்சம் காத்திருங்கள். இப்போது முழுமையாக இல்லாவிட்டாலும் கொஞ்சம் அதிகமாக நான் நேரம் எடுத்து கொள்வேன்.

**ஹஸ்ரத் குலாம் ரஸூல் சாகிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

நான் அல்லாஹ்வின் அருளினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களைச் சார்ந்தவனாவேன். 1901 அல்லது 1902 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் பைஅத் செய்தேன். அப்போது அங்கு ஒரு வாரம் நான் தங்கியிருந்தேன். ஹுஸூர் அவர்கள் தொழுகைக்குப் பிறகு பள்ளிவாயிலில் அமர்ந்திருக்கும்போது பொதுவாக மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்களின் கை கால்களைப் பிடித்து விடுவோம். ஹுஸூர் எங்களை தடுக்க மாட்டார்கள். அன்னாருடைய முகம் எப்படிப்பட்டதென்றால் எந்த சந்தேகங்களை மவ்லவிமார்கள் ஏற்படுத்தி வந்தார்களோ அவை அனைத்தும் அந்த முகத்தைப் பார்ப்பதன் மூலம் நீங்கிவிடும். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் முகம் ஒளிமயமான நட்சத்திரத்தைப் போன்று ஒளிவீசும் என நான் கேள்விபட்டிருக்கிறேன். நான் அவ்வாறே பார்க்கவும் செய்தேன். அன்னாருடைய முகத்தை பார்த்த உடனேயே என்னுடைய எல்லா ஆட்சேபனைகளுக்கும் விடை கிடைத்தது. கரம்தீன் அன்னாரை பற்றி வாதம் செய்தார். சந்துலால் நீதிபதியின் நீதிமன்றத்தில் வாதம் செய்தார். கூச்சல் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மக்கள் நான் சிறைக்குச் செல்வேன் என கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய இறைவன் சஹாபாக்களுக்கு பத்ர் போரில் வெற்றியை வழங்கியது போன்று உனக்கு வெற்றியை வழங்குவேன் என நமக்கு அறிவித்துள்ளான். அந்த சொற்கள் இன்று வரை எனது காதில் ஒலித்து கொண்டிருக்கிறது.

**ஹஸ்ரத் ரஹ்மதுல்லாஹ் சாகிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

அல்லாஹ் தனது கருணை மற்றும் அருளினால் என்னை தேர்ந்தெடுந்து ஹஸ்ரத் சாஹிபின் தொண்டனாக விளங்கும் நற்பேற்றை எனக்கு வழங்கினான்.

இதனுடைய விளக்கம் இவ்வாறாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) சில மாதம் லூதியானாவில் தங்கியிருந்தார்கள். அப்போது எனக்கு 17, 18 வயதிருக்கும். மாணவனாக இருந்தேன். ஹுஸுர் அவர்களின் முகத்தில் இருந்த ஒளி எனக்கு தென்பட்டது. அதனை சிந்தித்துப் பார்த்து இந்த முகம் ஒரு பொய்யரின் முகமாக இருக்க முடியாது என்று எனது உள்ளம் கூறி வந்தது. ஆனால் சுற்றியிருந்த மவ்லவிமார்கள் என்னை சந்தேகத்தில் ஆழ்த்தினார்கள். அதே நேரத்தில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலாவியுடன் ஹுஸுர் அவர்கள் லூதியானாவில் விவாதம் நடைபெற்றது. அதில் நானும் பங்கேற்றிருந்தேன். அதன் பிறகு என்னுடைய நேர்வழிக்காக இறைவன் இஸாலே அவ்ஹாமின் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகம்) இரண்டு பகுதிகளும் எனக்கு வழங்கினான். அது முழுமையாக ஒளி மற்றும் நேர்வழியினால் நிறைந்திருந்தது. இறைவன் அறிவான்; பெரும்பாலும் முழு இரவும் தூங்காமல் இருந்திருக்கிறேன்! புத்தகத்தைப் படித்தபடி தூங்கியிருந்தால் ஒருவேளை தூங்கியிருக்கலாம். இல்லையென்றால் புத்தகத்தைப் படித்துக் கொண்டும் அழுதுகொண்டும்தான் இருப்பேன். இறைவா! இது என்ன விஷயம்? மவ்லவிமார்கள் திருக்குர்ஆனை ஏன் கைவிடுகின்றனர்? என் உள்ளத்தில் அன்பின் சுவாலை அதிகரித்துக் கொண்டே சென்றது என்பதை இறைவன் அறிவான். மவ்லவி ரஷீத் அஹ்மத் சாகிப் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை திருக்குர்ஆனின் 30 வசனங்கள் மூலமாக நிரூபித்திருக்கின்றார்கள். தாங்கள் தயவுகூர்ந்து உயிருடன் இருப்பது தொடர்பான குர்ஆன் வசனங்கள் மற்றும் ஹதீஸ்களை எனக்கு எழுதி அனுப்புங்கள். மேலும் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் எழுதியுள்ள அந்த 30 வசனங்களின் ஆதாரங்களை ரத்து செய்து எனக்கு அனுப்பி வையுங்கள். நான் அதனை வெளியிடுகிறேன் என்றும் மவ்லவி ஒருவருக்கு எழுதினேன். அதற்கு, நீங்கள் ஈஸா (அலை) அவர்களின் மரணம், மற்றும் உயிருடன் இருப்பது தொடர்பாக மிர்ஸா சாஹிபிடமோ அல்லது அன்னாரின் சீடரிடமோ பேசாதீர்கள். ஏனென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பெரும்பாலான வசனங்கள் ஆதரவாக உள்ளன. ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் எவ்வாறு மஸீஹாகவும், மஹ்தியாகவும் உள்ளார்கள்? இதைப் பற்றி விவாதம் செய்யுங்கள். இதுதான் பிரச்சனைக்குரிய விஷயமாகும் என்று எனக்கு பதில் கிடைத்தது. அதற்கு, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டால் மிர்ஸா சாஹிப் உண்மையாளர் ஆவார் என எழுதினேன். அதற்கு அந்த அஹ்மதியல்லாத மவ்லவி சாஹிப் உங்கள் மீது மிர்ஸா சாஹிபின் தாக்கம் ஏற்பட்டு விட்டது, நான் உங்களுக்காக துஆ செய்வேன் என பதில் கிடைத்தது. நீங்கள் உங்களுக்காக துஆ செய்யுங்கள் என்று நான் பதிலளித்தேன். இறுதியில், ஏக இறை சன்னிதானத்தில் நான் வீழ்ந்தேன். என்னுடைய உள்ளம் உருகியது; அழுது புலம்பினேன். இறைவா! எனக்கு உனது திருப்திதான் வேண்டும். நான் உனக்காக எல்லா கண்ணியத்தையும் தியாகம் செய்யத் தயாராக உள்ளேன். எல்லா இழிவையையும் சகித்து கொள்வேன். நீ என் மீது கருணை செய்வாயாக! என நான் துஆ செய்தேன்.

கொஞ்ச நாள் தான் கழிந்தது. என்னுடைய உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது நான் சத்தியம் செய்கிறேன். அதிகாலைப்பொழுதில் சுமார் 4.00 மணியிருக்கும். 1893 -ம் ஆண்டு டிசம்பர் 25 -ம் தேதி திங்களன்று நான் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை கஷ்ஃபில் சந்தித்தேன். அந்தக் கனவின் விளக்கம் இவ்வாறாகும்.

நான் அஸர் தொழுகைக்காக ஒளு செய்து கொண்டிருக்கிறேன். அப்போது ஒருவர் என்னிடம் வந்து அரேபிய தூதர் (ஸல்) அவர்கள் வருகை தந்துள்ளார்கள். இந்த நாட்டில் தான் அன்னார் தங்கியிருப்பார்கள் எனக் கூறினார். நான் எங்கே? என்று கேட்டேன். அதற்கு இந்த கூடாரங்கள் ஹுஸுருடையதுதான் எனக் கூறினார்.

நான் வேகமாக ஒளு செய்து விட்டுச் சென்றேன். ஹுஸுர் சில சஹாபாக்களுடன் அமர்ந்திருந்தார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி கை கொடுக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அங்கு ஓரத்தில் அமர்ந்து விட்டேன். ஹுஸுர் அரபியில் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். நான் என்னால் இயன்ற வரை புரிந்து கொண்டிருந்தேன். பின்னர் ஹுஸுர் உருதுவில் பேசினார்கள். நான் உண்மையாளன், என்னைப் பொய்ப்படுத்தாதீர்கள் என்றெல்லாம் கூறினார்கள். அப்போதுதான் ஆமன்னா வஸதக்னா யா

ரஸூலல்லாஹ்! என்று கூறினேன். எல்லாக் கிராமங்களும் முஸ்லிம்களுடையதாக இருந்தது! இது என் விஷயம் என எண்ணி நான் வியப்படைந்தேன். (குர்பான்) தியாகம் செய்வதற்குரிய நாளாக அதுவிருந்தது. அது ஆரம்ப காலமாக இருந்தது. ஹுஸூர் இந்த நாட்டில்தான் இருப்பார்கள் என எனக்கு தகவல் தரப்பட்டது. அங்கிருந்து செல்ல ஹுஸூர் கட்டளையிட்டார்கள். ஹுஸூர்! நான் செல்கிறேன். ஆனால் எவ்வாறு உங்களை நான் சந்திப்பது என அழுதவாறு கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என் மீது கை வைத்துக் கூறினார்கள். கவலை கொள்ள வேண்டாம். நாமே உங்களை சந்திப்போம் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்கள் தான் ரஸூலே அரபி (ஸல்) அவர்கள் ஆவர் எனக்கு புரிய வைக்கப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள். இதன்பிறகு நான் பைஅத்திற்கான கடிதம் எழுதினேன். ஆனால் 1898 ஆம் ஆண்டு டிசம்பர் 27 -ல் நேரில் காதியான் சென்று மக்ரிப் தொழுகைக்குப் பிறகு பைஅத் செய்யும் பாக்கியம் பெற்றேன். எந்த ஒரு துன்பமும் என்னைத் தடுமாறச் செய்ய முடியாத அளவுக்கு இறைவனின் கருணை எனக்கு உறுதிப்பாட்டினை வழங்கியது. ஆனால் ஹுஸூர் அவர்களை மீண்டும் மீண்டும் சந்தித்து அவர்களுடன் இருந்ததன் விளைவாகவே எனக்கு இந்த பாக்கியம் கிடைத்தது. என்னுடைய இந்த கைகள் ஹுஸூர் அவர்களின் கைகளை மீண்டும் மீண்டும் பிடித்தது என்பதனை எண்ணி பெருமிதம் கொள்கிறேன். எனக்கு இல்ஹாம் இறங்கிய பிறகு பலவிதமான பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அதிலிருந்து இறைவன் பாதுகாத்தது மட்டுமல்ல. மாறாக இழப்பைவிட அதிகமாக அருள் செய்தான். மேலும் என்னுடைய தந்தை, சகோதரர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் அஹ்மதிகளாகி விட்டனர். அல்ஹம்துலில்லாஹ் !

**ஹஸ்ரத் மவ்லவி ஃபத்ஹே அலி சாகிப் கூறுகின்றார்கள் :**

நான் 1904 -ல் சில குழந்தைகளுடன் (காதியான்) சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கைகளில் பைஅத் செய்தேன். பெரும்பாலும் அதிகமாக பிள்ளைகளுடனேயே ஹுஸூர் அவர்களைச் சந்தித்து வந்தேன். ஹுஸூர் அவர்கள் தொழுகைக்காக வரும்போதெல்லாம் பள்ளியில் வந்து அமரும் போதெல்லாம் 5, 10 அடி தொலைவிலேயே அமர்ந்திருப்போம். ஹுஸூர் அவர்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்டு பயனடைவோம். சிலமுறை துஆவுக்காவும் கூறப்பட்டது. அப்போது அந்த பள்ளியில் கஷ்டப்பட்டு 5, 6 பேர் தான் நிற்க முடியும். பின்னர் முபாரக் பள்ளிவாயில் விரிவாக்கம் செய்யப்பட்டது. ஒருமுறை எங்கள் ஜமாஅத் பள்ளிவாசலின் இமாம் மவ்லவி கரம்தாஸ் சாஹிப் அவர்கள், ஹுஸூர் எங்கள் பள்ளியின் நீண்ட காலமாக இமாமாக இருந்து வரும் செய்யத் ஜாஃபர் ஷாஹ் சாஹிப் உங்களை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அஹ்மதியல்லாதவர்களுக்கு பின்னால் ஜனாஸா மற்றும் இதர தொழுகைகளில் கலந்து கொள்கின்றார்கள் என்று கூறினார்கள்.

நான் கூறினேன். அவர் எந்த அளவுக்கு உங்களை மதிக்கின்றார் என்றால் ஒருமுறை அவர் என்னிடம் நான் ஹுஸூர் அவர்களின் கீழான அடிமை ஆவேன் என்ற சொற்களால் கடிதம் எழுதி பெற்றுக் கொண்டார். அவர் அறியாமையின் காரணமாக தவறிழைத்திருந்தால் அல்லாஹ்வுக்காக மன்னித்து விடுங்கள் என்று ஹுஸூரிடம் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அவர் இதுவரை உலக ஆசை அல்லது அச்சத்தின் காரணமாக மற்றவர்களின் பின்னால் தொழுது வருகின்றார் என்றால் அவர் எப்படி நம்மை ஏற்றுக் கொண்டவராக இருக்க முடியும்! நீங்கள் அவருக்குப் பின்னால் தொழாதீர்கள் என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: நான் தையல்காரன் ஆவேன். எனவே அப்போது 8, 9 வயது நிறைந்த ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிப் அவர்களுக்காக கோர்ட் ஒன்றை தயார் செய்து கொடுத்தேன். இவ்வாறு நாங்கள் தயார் செய்து கொண்டிருந்த போது எங்களுக்கு பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே எங்களால் காதியானிற்கு படுக்கை கொண்டு வர இயலாது என பெண்கள் கூறினர். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இவர்களுக்கு படுக்கை மற்றும் ரஸாயி கொடுத்து விடுங்கள் எனக் கூறினார்கள்.

**மவ்லவி ஃபத்ஹே அலி சாஹிப் அஹ்மதி கூறுகின்றார்கள்:**

என்னுடைய 8, 10 வயது கொண்ட மகன் அப்துல் அஸீஸ் மர்ஹூம் என்னுடன் ஹுஸுரை சந்தக்க வந்து விடுவான். அவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவிதைகளை மிக அழகிய குரலில் படித்து வந்தான். ஜல்ஸாவின் போதும் மற்ற இடங்களிலும் படித்து வந்தான். ஹுஸுர் அவனிடம் அதிகமாக அன்பு செலுத்தினார்கள். தன்னியால்வாலைச் சார்ந்த மக்களின் வண்ணப்படங்களை கூட அவன் தான் ஹுஸுரிடம் கெண்டு சேர்த்து வந்தான். ஒருமுறை முஹம்மது அலி சாஹிப் ஒரு குறிப்பான துஆவிற்காக கடிதம் எழுதி அதனை ஹுஸுரிடம் கொடுத்து வரும்படியும், வீட்டிற்கு வருவதற்கு அனுமதி பெற்று வரும்படியும் கூறி அப்துல் அஸீஸை அனுப்பி வைத்தார்கள். ஹுஸுர் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு குளிர்தாங்கும் போர்வையினால் மூடி குழந்தைகளுடன் படுத்திருந்தார்கள். பையனோ சிறுவனாக இருந்தான். மதிப்பும், மரியாதையும் தெரியாத பருவமுடையவனாக இருந்தான். ஹுஸுர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். சிலமுறை ஃபஜ்ர் தொழுகைக்குப்பிறகு சிறிது ஓய்வெடுப்பார்கள். இந்த சிறுவன் நேரடியாக உள்ளே சென்றான். ஹுஸுர் அவர்களின் அருளுக்குரிய முகத்திலிருந்து மூடியிருந்த போர்வையை எடுத்தான். அந்தக் கடிதத்தை கொடுத்து வீட்டிற்கு வருவதற்கு அவருக்காக அனுமதி கேட்டான்.

அன்னார் எழுதுகின்றார்கள்:

என் தாய், தந்தை ஹுஸுர் அவர்களுக்கு அர்ப்பணம்! ஹுஸுர் அவர்கள் சிறுவனின் செயலால் முட்டாளே! தூக்கத்தைக் கெடுத்து விட்டாயே என்று சிறிதும் கோபப்படவில்லை! மாறாக மிகவும் கனிவுடன் அனுமதி அளிக்கப்படுகிறது என கூறினார்கள். முழு மனித இனத்தையும் தன்வசப்படுத்திய அன்னாரின் உயர்ந்த நல்லொழுக்கம் இதுதான்!

அம்பாலா ஊரைச் சேர்ந்த ஹஸ்ரத் பாஹ்வால் ஷாஹ் சாஹிப் எழுதுகின்றார்கள்:

இந்த எளியவனுக்கு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏன் சந்திக்க செய்தான்? அதனால் என்ன பலன் கிடைத்தது என்பதை விளக்கித் தந்தான்.

எந்த இறைவனின் முன்பு பொய் பேசுவது குஃப்ர் மற்றும் வழிகேடாகுமோ அந்த ஏக இறைவனை சாட்சியாளனாகக் கருதி நான் கூறுகிறேன். எனக்கு குழந்தைப் பருவம் முதலே மார்க்கத்தோடு பற்று இருந்தது. சுமார் 30 வயதில் சுன்னத்தின்படி அமல் செய்ததன் காரணமாக பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிய ஒரு வழக்கினை 3 வருடங்கள் வரை சந்திக்க நேரிட்டது. குழந்தைப்பருவம் முதலே உண்மையான குருமார்களை வழிகாட்டியைத் தேடி வந்தேன். பல சான்றோர்கள் மீது எனது பார்வை இருந்தது. மாறாக மனதில் நிம்மதியின்றி இருந்தேன். இறுதியில் இமாமுத்தீன் சாஹிப் மூலமாக எனது ஆசிரியரும் மவ்லவி அப்துல் ஹக் சாஹிப் அவர்களின் தந்தையாகிய அவர்கள் உயிருடன் இருந்தார்கள். அவர்களைப் பற்றி கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி சில வாதங்களைக் கேள்விப்பட்டோம். இக்காலம் இமாமின் தேவையுடைய காலமாகும். அன்னார் உண்மையான இமாம் ஆவார்கள். மக்கள் அவரை ஏசிப் பேசுகின்றனர். மவ்லவி அப்துல் ஹக் சாஹிப் அவர்களை நோக்கி, அவரை நீங்கள் ஒருபோதும் தவறாகப் பேசக் கூடாது எனக் கூறினார்கள். மவ்லவி நஸ்ர் ஹுஸைன் சாஹிப் அவர்களிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா கொடுக்க ஒப்புதல் வாங்கச் சென்ற போது, நானும் மவ்லவி அப்துல் ஹக் சாஹிப் அவர்களும் அப்போது அங்கு டெல்லியில் கல்வி பயின்று கொண்டிருந்தோம். மவ்லவி முஹம்மது ஹுஸைன் டெல்லியிலிருந்து திரும்பி வந்து மக்களிடம் சென்று ஹஸ்ரத் சாஹிபை காஃபிர் எனக் கூறி வந்தார். மவ்லவி இமாமுத்தீன் சாஹிப் அவர்களிடமும் சென்றார். ஆனால் ஒருபோதும் அவர் ஒன்றும் தவறாக கூறவில்லை. அன்னார் கூறினார்கள்: குஃப்ர் ஃபத்வாவை நீங்கள் தயாரித்துள்ளீர்கள். இதில் எனக்கு எந்த பங்குமில்லை. இந்தப் பணி உங்களுடன் இருந்து கொள்ளட்டும் எனக் கூறிவிட்டார்கள். இறுதியில், முஹம்மது ஹுஸைன் நம்பிக்கையிழந்து சென்று விட்டான்.

எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சீடர் ஹஸ்ரத் மவ்லவி அப்துல்லாஹ் சனோரி அவர்கள் மீது அன்பிருந்தது. அன்னாரைப் பற்றி புத்தகங்களில் குறிப்பு வருகின்றது. வழக்கு நீண்ட போது மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் சனோரி மற்றும் மவ்லவி அப்துல் ஹக் சாஹிப் என்னை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் துஆ செய்வதற்காக என்னை அனுப்பி வைத்தார்கள். நான் பட்டாலாவிலிருந்து (காதியான்) செல்ல தொடங்கிய போது என்னை சந்தித்த அனைவரும் அங்கே போகாதே! அவர் அப்படிப்பட்டவர்; இப்படிப்பட்டவர் என்றெல்லாம் கூறினார்கள். மவ்லவிமார்கள் தவறாகப் பேசுகின்றார்கள். நீ அங்கு சென்றால் காஃபிர் ஆகி விட்டாய் என்று கூறினார்கள். இவ்வாறாக 1898 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ம் நாளன்று காதியான் சென்றடைந்தேன். மாலைப் பொழுதாகி இருந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் (ரலி), ஹஸ்ரத் முஃப்தி ஸாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் மற்றும் பல சஹாபாக்கள் அங்கிருந்தனர். மவ்லவி அப்துல் காதிர் சாஹிப் மர்ஹூம் லூதியானா அவர்களும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். இவர் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் ஹக் சாஹிப் அவர்களின் அரபி இலக்கண ஆசிரியர் ஆவார். நானும் அன்னாரை அறிந்திருந்தேன். தற்செயலாக அன்னார் என்னை பார்த்தார்கள். அன்னாரைக் கண்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. நீங்கள் பைஅத் செய்ய வந்துள்ளீர்களா? எனக் கேட்டார்கள். நான் மவ்லவிகளைக் கண்டு அஞ்சவில்லை எனக் கூறினேன். ஹுஸுர் அவர்களின் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் ஹுஸுரின் உண்மைத்துவம் எனக்கு வெளிப்பட்டது. இது பொய்யரின் முகமாக இருக்க முடியாது. பைஅத் செய்வதற்காக ஒருவர் வந்திருந்தார். ஹுஸுர் என்னிடம் பைஅத் வாங்குங்கள். நான் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் எனக் கூறினார். ஹுஸுர் கூறினார்கள். கொஞ்சம் பொறுமை செய்யுங்கள். நன்றாக மன நிறைவடைந்து கொள்ளுங்கள் என்று கூறி வேறு விஷயத்தைப் பேசிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் மவ்லவி அப்துல் காதிர் சாஹிப் என்னைப் பற்றி ஹுஸுரிடம் அவர்களாகவே இவர் பைஅத் செய்ய விரும்புகிறார் என்று கூறினார்கள். அதைக் கேட்டு யார் பைஅத் செய்ய விரும்புகிறாரோ அவர் வாருங்கள் என ஹுஸுர் கூறினார்கள். அந்த முதல் நபர் ஏற்கனவே அருகில்தான் அமர்ந்திருந்தார். என்னுடைய உள்ளத்தில் கயிற்றினால் ஒருவர் இழுக்கப்படுவதைப் போன்று ஓர் ஈர்ப்புச் சக்தியை நான் உணர்ந்தேன். ஏங்கி அழுதேன். ஹுஸுர் அவர்களுக்கு அருகில் அமர்ந்தேன். மகிழ்ச்சியுடன் ஹுஸுருடைய கைகளில் எனது கையைக் கொடுத்தேன். நாங்கள் இருவரும் பைஅத் செய்தோம். அதன் பின்பு வழக்கிற்காக துஆ செய்யும்படி கூறினேன். ஹுஸுர் துஆ செய்தார்கள். நான் அங்கு 10 நாட்கள் தங்கினேன். ஹுஸுர் மீதும் காதியான் மீதும் எந்த அளவுக்கு அன்பு ஏற்பட்டு விட்டதென்றால் காதியானை விட்டு திரும்பிச் செல்வது இயலாத காரியமாகி விட்டது. காதியான் சொர்க்கமாக காட்சியளித்தது. அங்கு எப்போதும் அல்லாஹ்வின் திக்ரைத் தவிர உலகத்தின் கூச்சல் குழப்பத்தின் சப்தமே கேட்கவில்லை. நாலாபுறமிருந்தும் ஸலாமன், ஸலாமன் (அமைதி, அமைதி என்ற சப்தமே கேட்டது. என்னுடைய எல்லா துன்பங்களும் நீங்கியது. அதன் பிறகு அனுமதி பெற்று திரும்பி வந்து விட்டேன்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

பைஅத் செய்த பிறகு என்னிடத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இறைவன் மீது எந்த அளவுக்கு அன்பு ஏற்பட்டு விட்டதென்றால் பகலிலும் இரவிலும் அவனை நினைவு கூறாமல் தூங்குவதற்கு மனம் வரவில்லை. தூங்கினாலும் கூட ஒருவர் தனது அன்பிற்குரியவரை பிரிந்து விட்டதைப் போன்று பதறிப் போய் எழக் கூடியவனாக இருந்தேன். என்னுடைய உள்ளத்தின் நிலையே வேறு விதமாக இருந்தது. யாரோ ஒருவர் தனது உள்ளத்தை பிடித்து கழுவுவது போன்றிருந்தது. உருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. ஹுஸுரின் கவனத்தின் தாக்கமாக இந்நிலை எனக்கு ஏற்பட்டது. என் உள்ளம் சுத்தப்படுத்தப்பட்டு புதிய ஆன்மா ஊதப்பட்டது போன்றும் நான் உணர்ந்தேன். பரிசுத்த ஆவி உள்ளே நுழைந்தது போன்று உணர்ந்தேன். கர்ப்பிணி பெண்ணைப் போன்ற நிலை எனக்கு ஏற்பட்டது. எனது வயிற்றில் பிள்ளை இருப்பதுபோன்று தோன்றியது. எனது உடல் ஓர் இன்பத்தால் நிறைந்து ஒளிமயமானது. மேலும் உள்ளத்தில் ஒளி ஓடுவது போன்று தோன்றியது. திக்ர் செய்யும் போது வேறு எந்த பொருளினாலும் நாவிற்கு கிடைக்காத ஒரு இன்பம்

நாவிற்கு கிடைத்தது. எனக்குப் பின் நின்று தொழுபவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து எவ்வளவு அழகாக தொழ வைத்தீர்கள் என்று கூறினார்கள். இந்நிலை உண்மையில் எனது நிலையாக இருக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நிலையின் வடிவமாக இருந்தது. வழக்கு அல்லாஹ்வின் அருளினாலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆவின் மூலமாகவும் வெற்றிகரமாக அமைந்தது. ஆனால் உண்மையில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை வந்தடைவதற்கு அல்லாஹ் அதனை ஒரு காரணியாக்கினான். அல்லாஹ் இந்த எளியவனுக்கு விண்ணுலக பயணத்தை வழங்கி அவனைக் காணும் பாக்கியத்தை வழங்குவானாக!

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிரிகளின் புத்தகங்களை எடுத்துக் கொண்டு தனியாக பள்ளிவாயிலில் அமர்ந்து விடுவேன். மிக ஆழமாக படிப்பேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஆதாரங்களை திருக்குர்ஆன் வசனங்களோடு பொருந்துவதைக் கண்டேன். ஒருநாள் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிரியின் ஒரு புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பார்த்தவுடன் தூக்கம் வருகின்ற அளவுக்கு புத்தகம் எழுதியுள்ள இவர் எவ்வாறு ஆலிமாவார்? என உள்ளத்தில் மிகவும் வியப்படைந்தேன். பின்னர் தூங்கி விட்டேன். அதன் பின்னர் இல்ஹாம் இறங்கியது. இந்த இல்ஹாம் என் உள்ளத்தில் தெளிவாக பதிந்தது. இந்த இல்ஹாம் உள்ளத்தில் இறங்கியவுடன் நாவில் வெளிப்பட்டது. மேலும் இந்த இல்ஹாமின் விளக்கமும் கற்றுத் தரப்பட்டது. இந்த ஆலிம் எப்படிப்பட்ட சமுதாயம் என்றால் அவர்களிடத்தில் எச்சரிக்கை செய்யும் சமுதாயம் அதாவது நபிமார்கள் வரும்போதெல்லாம் அது ஆச்சரியப்படும் சமுதாயமாகவே இருந்தது. என்னுடைய இல்ஹாம்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எழுதி வந்தேன்.

கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி எவர் என்ன ஆட்சேபனை செய்தாலும் திருக்குர்ஆனின் வசனம் அதற்குரிய பதிலாக எனக்கு கிடைத்து விடும். நான் திருக்குர்ஆனிலிருந்து பதிலளிப்பேன். ஒருமுறை ஒரு மவ்லவி என்னிடம் வந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாக திருக்குர்ஆனிலிருந்து மரணம் என்ற வெளிப்படையான வசனத்தை காட்டு எனக் கேட்டார். நான் கூறினேன். அல்லாஹ் கூறுகின்றான்:

அதாவது, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை, சிலுவையில் அறைந்து கொல்லவுமில்லை; அவர்கள் கொலை செய்யப்படவுமில்லை. மாறாக, இயற்கை மரணமே அடைந்தார்கள் என்ற திருக்குர்ஆனின் தீர்ப்பிற்கேற்ப இந்த விஷயத்தின் மீது தமது மரணத்திற்கு முன் வேதத்தையுடையவர்கள் நம்பிக்கை கொள்வார்கள். பிஹி என்பது வமா கத்தலூஹு வமா ஸலபுஹு (அவர்கள் அவரை கொலை செய்யவுமில்லை. அவர்கள் வரை சிலுவையில் அறைந்து கொல்லப்படவுமில்லை) என்பதை குறிக்கின்றது. மவ்த்திஹீ என்பது ஈஸா (அலை) அவர்களின் இயற்கை மரணத்தைக் குறிக்கும். அன்னார் மறுமை நாளில் நான் சிலுவை மற்றும் கொலை மூலமாக மரணிக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆன் தீர்ப்பிற்கேற்ப இயற்கை மரணமே அடைந்தேன் என ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சாட்சி கூறுவார்கள். இந்த பதிலைக் கேட்டு அந்த மவ்லவி ஓடி விட்டார். மேலும் அக்கிராமத்தின் பெரும்பான்மை அஹ்மதி ஆகி விட்டது. பின்னர் மவ்லவிமார்கள் பயமுறுத்தியதன் விளைவாக சிலர் வழிதவறிச் சென்றனர்.

**காஷ்மீரைச் சார்ந்த ஹஸ்ரத் மதத்கான் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

1896 -ல் பைஅத் செய்து 1904 -ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கண்டார்கள்.

அவர் கூறுகின்றார்கள்: என் அன்பிற்குரிய இறைவா! என்னுடைய இந்த எழுத்துக்களில் பரக்கத் செய்வாயாக!

அன்னார் எழுதுகின்றார்கள்: ஒருமுறை நடந்த சம்பவம். 1904 -ல் மதிப்பிற்குரிய கரம்தீனுடன் ஒரு வழக்கு நடந்தது. குர்தாஸ்பூரில் சந்துவால் நீதிமன்றத்தில் தனது சார்பாக காஜா கமாலுத்தீன் சாஹிப் வக்கீலாக இருந்தார்கள். கரம்தீன் சாஹிப் சார்பாக மோல்ராஜ் மற்றும் நபி பக்ஷ் வக்கீலாக இருந்தார்கள்.

காதியானிலிருந்து நானும் சஹாஃபிழ் ஹாமித் அலி சாஹிபும் புத்தகங்களை எடுத்துக் கொண்டு குர்தாஸ்பூர் சென்றடைந்தோம். வழியில் டாக்டர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் மிகவும் சோகமாக தென்பட்டார்கள். ஏன்? இந்த அளவுக்கு கலக்கம் அடைந்துள்ளீர்கள் எனக் கேட்டேன். சகோதரரே! இங்கு எப்படியாவது ஹுஸுர் அவர்களை சிறைச்சாலைக்கு அனுப்பிவிட வேண்டும் என்று ஆலோசனை செய்யப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. ஐந்து நிமிடத்திற்காவது சிறைக்கு கண்டிப்பாக அனுப்பி விட வேண்டும் என்று பேசியுள்ளார்கள். சந்துவால் இதற்கான உறுதியான திட்டம் தீட்டியுள்ளான். எனக்கு ஒரு பெரிய அதிகாரி இந்த தகவலை தந்துள்ளார் என்றும் இதனால் தான், தான் சோகமாக இருப்பதாகவும் டாக்டர் சாஹிப் கூறினார்கள். இப்போது நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்கள்? என்ன செய்ய வேண்டும்? என நான் டாக்டர் சாஹிபிடம் கேட்டேன். ''நீங்கள் குர்தாஸ்பூர் வர வேண்டாம். வராமல் இருக்க மெடிக்கல் சான்றிதழ் வாங்கிக் கொள்ளுங்கள். அதற்காக 100 ரூபாய் செலவானாலும் அதனை நான் செலுத்தி விடுகிறேன்'' என்ற செய்தியை இறைவனுக்காக ஹுஸுருக்கு கொண்டு செல்லுங்கள். இது நற்கூலிக்குரிய காரியமாகும். பொய்யான சான்றிதழ் பெறுவதா எனக் கேட்டேன். அதற்கு டாக்டர் சாஹிப், இது நற்கூலிக்குரிய காரியமாகும். இந்த செய்தியை கொண்டு செல்லுங்கள் எனக் கூறினார்கள். அப்போது எனக்கு கைவிளக்கு தாருங்கள். நான் இரவோடு இரவாக சென்று விடுகிறேன் என்று கூறினேன். டாக்டர் சாஹிப் எனக்கு கைவிளக்கைத் தந்தார்கள். குர்தாஸ்பூரிலிருந்து காதியான் சென்றடைந்தேன். வழியில் இரண்டு நபர் காணக்கிடைத்தார்கள். இரவு இரண்டு மணிக்கு முபாரக் பள்ளிவாயிலை சென்றடைந்தோம். நான் குரல் கொடுத்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியே வந்தார்கள். நான் ஸலாம் கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் நீங்கள் புத்தகத்தோடு குர்தாஸ்பூர் அல்லவா சென்றீர்கள்? என்று கேட்டார்கள். நான் நடந்தவற்றை கூறினேன். டாக்டர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவர்கள் எனக்கு இந்த தகவல் தந்து அனுப்பியுள்ளார்கள். அப்போது ஹுஸுர் கூறினார்கள்.

ஏற்கனவே எனக்கு தலைச்சுற்று இருந்து வந்தது. மெடிக்கல் சான்றிதழ் எடுக்க நான் நாடியிருந்தேன். ஆனால் இப்போது இந்த தூதுச் செய்தியைக் கொண்டு வந்து தருகின்றீர்கள். எனவே நான் கண்டிப்பாக செல்வேன். பயப்பட அவசியமில்லை என்று கூறி எனக்கு வீட்டிலிருந்து போர்வையை அனுப்பி வைத்தார்கள். நான் சோர்வடைந்திருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கிருந்து குர்தாஸ்பூர் சென்று விட்டார்கள். அது பெரிய சம்பவமாகும். பலர் என்னையும் தடுத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு சென்று அடைந்திருப்பார்கள். நான் கண் விழித்ததும் தயாராகி நடந்தே குர்தாஸ்பூர் செல்ல தொடங்கினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடந்து வர வேண்டாம். வண்டி அனுப்புங்கள் என கூறியிருந்தார்கள். ஆனால் எப்படியிருப்பினும் நான் கிளம்பி விட்டேன். வழியில் எனது நிலை மிக மோசமாகி விட்டது. எனக்கு காய்ச்சலும் ஏற்பட்டது. செல்லாதீர்கள். நீங்கள் சோர்வடைந்துள்ளீர்கள். நீங்கள் செல்வது இது மூன்றாவது முறையாகும் என்றெல்லாம் கூறி மக்கள் என்னை தடுத்தது சரிதான் என்பதை உணர்ந்தேன். எப்படியிருப்பினும் நான் மாலைப் பொழுதில் குர்தாஸ்பூர் சென்றடைந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள். நான் வீட்டினுள் நுழைந்தவுடன் என் காதில் சப்தம் கேட்டது. மதத்கான் அவர்களையும் அழைத்து வந்தீர்களா? என்று சப்தம் கேட்டது. நான் சென்று ஹுஸுருக்கு அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறினேன். ஹுஸுர் அவர்கள் உடனடியாக தனது அருளுக்குரிய கையை நீட்டி கை குலுக்கி ஜஸாக்குமுல்லாஹ் எனக் கூறினார்கள். இவர் மிகவும் தைரியசாலி ஆவார். இது இவருக்கு காதியான் மற்றும் குர்தாஸ்பூர் இடையில் மூன்றாவது சுற்றாகும். ஹுஸுர் தனது கையால் எனது கையை பிடித்தவுடன் நான் குர்தாஸ்பூரிலிருந்து நடந்து காதியானிற்கு ஒருபோதும் செல்லாதது போன்று தோன்றியது. தூக்கம் மற்றும் சோர்வினால் எனது நிலை மிக மோசமாக இருந்தது. மக்களிடம் பேசக்கூட முடியவில்லை. எனது சோர்வு முழுமையாக நீங்கி விட்டது என்று நான் உணரும் வரை இறைவனின் தூதர் எனது கைகளை விடவில்லை. சில நிமிடத்திற்கு முன்பு வரை நான் மரணித்தவனாக இருந்தேன். ஹுஸுர் அவர்களின் அருளுக்குரிய கைகள் என்மீது பட்டவுடன் எனது அச்சமும், சோர்வும் நீங்கியது. உடல் இயல்பு நிலைக்குத் திரும்பியது. இது என்ன விஷயம்? இது ஹுஸுருடைய அற்புதம்தான்! பசியும், தாகமும் இன்பத்தால் நீங்க

முடியும் என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த சோர்வும், தளர்வும், தூக்கமும் ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய கை பட்டதும் நீங்கி விடும் என்பதை நான் கண்டு கொண்டேன். இது ஹுஸூருடைய அற்புதம் இல்லையென்றால் வேறு என்னவாக இருக்க முடியும்? மரணித்துப்போன என்னிடத்தில் மீண்டும் வந்ததுபோன்று நான் உணர்ந்தேன். என்னுடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கும் வரை எனது கைகளை ஹுஸூர் விடவில்லை. அதற்கு முன் எனது உடல் கல்லாக இருந்தது. அசைவது மிகக் கடினமானதாக இருந்தது. என் கருத்தின்படி இதைத்தான் மரணித்தவரை உயிர்ப்பிப்பது என்று கூறுகின்றோம். குர்தாஸ்பூர் நான் போகாதது போன்று நான் உணர்ந்தேன. உணவு கொண்டு வரும்படி ஹுஸூர் கட்டளையிட்டார்கள். என்னையும் ஹுஸூர் தன்னுடன் அமர்த்திக் கொண்டார்கள். நான் ஹுஸூருடன் அமர்ந்து உணவு உண்டேன். இது ஹுஸூருடைய சிறப்பான அன்பும், பரிவும் ஆகும். எனது பெயரை ஹுஸூர் உச்சரிக்க வேண்டும். என்னை அழைக்க வேண்டும் என்று நான் முயற்சி செய்து வந்தேன். இதன் பிறகு ஹுஸூர் அவ்வப்போது என்னை நினைவு கூர்ந்து வந்தார்கள். என்னை தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தார்கள்.

ஆக இது அந்த சான்றோர்களின் சம்பவங்களாகும். அதனை இதற்கு முன்பும் அவ்வப்போது ஒருசில முறை நான் கூறியிருக்கின்றேன். இந்த சான்றோர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு நினைவிருக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு பெரிய உபகாரம் நம்மீது செய்துள்ளார்கள். இல்லையென்றால் உண்மையை எந்த அளவுக்கு தைரியத்துடன் அந்த சான்றோர்கள் ஏற்றுக் கொண்டார்களோ அந்த அளவுக்கு உண்மையை ஏற்றுக் கொள்ளும் தைரியம் பலருக்கு இல்லாமல் போயிருக்கும். எனவே இந்த சான்றோர்களின் சந்ததிகள் அவர்களுக்காக அதிகமாக துஆவும் செய்ய வேண்டும். மேலும் அதனுடன் தம்முடைய ஈமானின் முன்னேற்றம் மற்றும் உறுதிப்பாட்டிற்காக துஆவும் செய்ய வேண்டும். இந்த சான்றோர்களின் முன்மாதிரியினை அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு அவர்களுக்கு இருந்த தொடர்பை கண்முன் நிறுத்தி அதன்படி செயல்பட எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அந்த சான்றோர்களில் பலர் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்களில் பலர் கல்வி அறிவில் குறைவானவர்களாக இருந்தனர். அறிவு மற்றும் ஆன்மீக தாகத்தை தணிக்க ஒரு துடிப்புடையவர்களாக இருந்தனர். ஒரு உண்மை நேசருக்குரிய கடமையை செலுத்தினார்கள். மேலும் இதேபோன்று நீங்கள் சில சம்பவங்கள் மூலமாக செவியேற்றது போன்று அல்லாஹ்வுடனான தொடர்பையும் அவர்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

ஆக, இந்த அன்பு மற்றும் விசுவாசத்தின் தூய முன்மாதிரிகளை அடுத்த தலைமுறையுடன் நிலைநிறுத்த வேண்டும். அல்லாஹ்வுக்காக அன்பு, மற்றும் விசுவாசத்தின் இந்த தூய முன்மாதிரிகளை நிலைநிறுத்தும் பாக்கியத்தை அல்லாஹ்வும் அனைவருக்கும் தந்தருள்வானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 17.12.2010

Translated by : Maulvi ABDUR RAHMAN TAHIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456